www.padippkam.com

# சமுதாயத்தின் அடிப்படை மற்றும் முதன்மை முரண்பாடுகள்

கார்முகில்

உற்பத்தி சக்திகளுக்கும்
உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான
முரண்பாடும் வர்க்கப் போராட்டமுமே
வர்க்க சமுதாயத்தின் இயக்கவடிவமாகும்.
இவ்வியக்க வடிவம் குணாம்ச ரீதியில்
வேறுபட்ட பல்வேறு சமுதாய
வளர்ச்சிப் போக்குகளை பெற்றிருக்கிறது.
ஒவ்வொரு சமுதாய வளர்ச்சிப் போக்கும்
ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட
வெவ்வேறு அடிப்படை முரண்பாடுகளைப்
பெற்றுள்ளது. இந்த அடிப்படை
முரண்பாடுகள்தான் அந்த சமுதாய
வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தைத்
தீர்மானிக்கின்றன. இவ்வடிப்படை
முரண்பாடுகள் தீர்க்கப்படும்போது
இவ்வளர்ச்சிப் போக்கின் சாராம்சம்
மறைகிறது. அச்சமுதாய வளர்ச்சிப்
போக்கும் முற்றுப் பெறுகிறது.

படிப்பகம்

www.padippkam.com

உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்!



தநாமாலெக

படிப்பகம்

www.padippkam.com

# சமுதாயத்தின் அடிப்படை மற்றும் முதன்மை முரண்பாடுகள்

கார்முகில்

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி

படிப்பகம்

www.padippkam.com

இரண்டாம் பதிப்பு
சனவரி 2004

விலை : ரூ 20

இது 1981இல் கட்சிக்குள் சுற்றுக்கு விடப்பட்டது. 1985 ஆகஸ்டில் தனி வெளியீடாக வந்தது. சில திருத்தங்களுடன் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.

# சமுதாயத்தின் அடிப்படை மற்றும் முதன்மை முரண்பாடுகள்

ஒரு சமுதாயத்தில் நிலவும் கட்டத்தின் (Stage) அடிப்படை முரண்பாடு, இடைக் கட்டத்தின் முதன்மை முரண்பாடு ஆகியவற்றைப் பற்றி ஒரு சரியான வரையறுப்புக்கு வருவது புரட்சியில் அக்கறை கொண்ட அனைவருக்கும் அவசியமாகும். அடிப்படை முரண்பாட்டைப் பற்றிப் பிழையின்றி தீர்மானிப்பது புரட்சியின் கட்டத்தையும், தன்மையையும் பற்றிப் பிழையின்றி தீர்மானிப்பதற்கு உதவுகிறது. குறிப்பிட்ட இடைக் கட்டத்தில் புரட்சியின் நண்பர்களையும், எதிரிகளையும் தீர்மானிக்கவும், மக்களுக்கும் எதிரிகளுக்கும் இடையிலான முரண்பாட்டையும், எதிரிகளுக்கு இடையிலான முரண்பாட்டையும் பிழையின்றி கையாளவும், புரட்சிகர ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டி புரட்சியை முன்னெடுத்துச் செல்லவும் முதன்மை முரண்பாட்டைப் பற்றிய பிழையற்ற கணிப்பு உதவுகிறது. எனவேதான் ''ஒரு கால் முதன்மை முரண்பாட்டைக் கிரகித்துக் கொண்டால் எல்லாப் பிரச்சினைகளும் எளிதில் தீர்ந்து விடுகின்றன'' என்றார் மாவோ.

படிப்பகம்

www.padippakam.com



# 1

## அடிப்படை முரண்பாடும், சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடும்

இப்பிரபஞ்சம் முழுவதிலும் உள்ள அனைத்து பொருள்களும் தாக்கம் எதிர் தாக்கம் (இயந்திரவியல்), கூட்டல் கழித்தல், நுண்ணெண் முழுவெண் (கணிதவியல்), நேர் மின்னாற்றல் எதிர் மின்னாற்றல் (பௌதீகவியல்), வர்க்கப் போராட்டம் (வர்க்க சமுதாயம்), அணுக்களின் இணைவும் பிரிவும் (இரசாயன இயல்), வளர்சிதை மாற்றம் (உயிரியல்) ஆகிய பல்வேறு இயக்க வடிவங்களின் தொகுதியாகவே உள்ளன. ஒவ்வொரு இயக்க வடிவமும் (Form of motion) பல்வேறு வளர்ச்சிப் போக்குகளை (Process of Development) கொண்டவையாகும். இவ்வளர்ச்சிப் போக்குகள் ஒவ்வொன்றும் அவற்றின் சாராம்சத்தைத் தீர்மானிக்கக் கூடிய வெவ்வேறு அடிப்படை முரண்பாடுகளைக் கொண்டவையாய் இருப்பதால் அவை ஒன்றிலிருந்து ஒன்று பண்பு வகையில் வேறுபட்டவையாய் உள்ளன. இதனால் குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடு தீர்க்கப்படும்போது அவ்வளர்ச்சிப் போக்கும் முற்றுப் பெறுகிறது. எனவே தான் "ஒவ்வொரு உண்மையான கற்பனையற்ற வளர்ச்சிப் போக்கும் தன்மையிலேயே மாறுபாடு கொண்டது" என்றார் மாவோ.

இயக்க வடிவத்திற்கும் அதன் வளர்ச்சிப் போக்குகளுக்கும் இடையிலான உறவு என்னவெனில் இயக்க வடிவத்தின் முரண்பாடுகள் அதன் அனைத்து வளர்ச்சிப் போக்குகளிலும் அனைத்தும் தழுவிய இயல்பு (Universality) பெற்றுள்ளது என்பதும், அதே நேரத்தில் ஒவ்வொரு வளர்ச்சிப் போக்கும் இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்புகளை தனது சிறப்பியல்புகளில் (Particularity) கொண்டிருக்கிறது என்பதும் ஆகும். எனவே ஒரு வளர்ச்சிப் போக்கு முற்றுப் பெறுவதென்பது இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்பை முற்றுப் பெறச் செய்யாமலேயே குறிப்பிட்ட வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தையும், சிறப்பியல்பையும் மட்டுமே முற்றுப் பெறச் செய்வதாய்



இருக்கிறது. அப்போது அவ்விடத்தில் அதே இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்பு கொண்ட மற்றொரு குறிப்பிட்ட சிறப்பியல்பு கொண்ட வளர்ச்சிப் போக்கும் அதன் சாராம்சமும் தோற்றம் பெறுகிறது. எனவே தான் வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தை தீர்மானிக்கக் கூடியதும், இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்புகளைக் கொண்டுள்ளதுமான சிறப்பியல்பான முரண்பாடுகளே அவ்வளர்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடுகள் எனப்படுகின்றன.

உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடும், வர்க்கப் போராட்டமுமே வர்க்க சமுதாயத்தின் இயக்க வடிவமாகும். இவ்வியக்க வடிவம் பண்பு வகையில் வேறுபட்ட பல்வேறு சமுதாய வளர்ச்சிப் போக்குகளைப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு சமுதாய வளர்ச்சிப் போக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வெவ்வேறு அடிப்படை முரண்பாடுகளைப் பெற்றுள்ளது. இந்த அடிப்படை முரண்பாடுகள்தான் அந்த சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தைத் தீர்மானிக்கின்றன. இவ்வடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படும் போது இவ்வளர்ச்சிப் போக்கின் சாராம்சம் மறைகிறது. அச்சமுதாய வளர்ச்சிப் போக்கும் முற்றுப் பெறுகிறது.

வர்க்க சமுதாய இயக்க வடிவத்திற்கும், சமுதாய வளர்ச்சிப் போக்கிற்கும் இடையிலான உறவு என்னவெனில், சமுதாய இயக்க வடிவத்தின் முரண்பாடு (உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடு, அதன் வெளிப்பாடான வர்க்கப் போராட்டம்) வர்க்க சமுதாய வளர்ச்சிப் போக்குகள் அனைத்திலும் அனைத்தும் தழுவிய இயல்பு பெற்றுள்ளது என்பதும், அதே நேரத்தில் ஒவ்வொரு வர்க்க சமுதாய வளர்ச்சிப் போக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டை (அதன் வெளிப்பாடாக வர்க்கப் போராட்டத்தையும்) தனது சிறப்பியல்புகளில் கொண்டுள்ளது என்பதும் ஆகும். எனவே ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கு முற்றுப் பெறுவதென்பது வர்க்க சமுதாய இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்புகளை (உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, அதன் வெளிப்பாடான வர்க்கப் போராட்டம்) முற்றுப் பெறச் செய்யாமலேயே குறிப்பிட்ட வர்க்க சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தையும் சிறப்பியல்பையும் மட்டுமே முற்றுப் பெறச் செய்வதாகிறது. அப்போது அவ்விடத்தில் வர்க்க சமுதாய இயக்க

படிப்பகம்

www.padippkam.com



வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்பு கொண்ட மற்றொரு குறிப்பிட்ட சிறப்பியல்பு கொண்ட வளர்ச்சிப் போக்கும், அதன் சாராம்சமும் தோற்றம் பெறுகிறது. எனவேதான் வர்க்க சமுதாய இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்பை (உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, அதன் வெளிப் பாடான வர்க்கப் போராட்டம் ஆகியவற்றை) கொண்டுள்ளதும், ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தைத் தீர்மானிக்கின்றதுமான சிறப்பியல்பான முரண்பாடுகளே வர்க்க சமுதாய வளர்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடுகள் எனப் படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு நிலவும் உற்பத்தி உறவுகளை மாற்றுவது அவசியமாகும் போது அந்த உற்பத்தி உறவுகள் மாற்றப்பட்டு புதிய உற்பத்தி உறவுகள் அமைக்கப் படுகின்றன. இது குறிப்பிட்ட உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான சிறப்பியல்பான முரண்பாட்டை முற்றுப் பெறச் செய்திருந்தாலும் புதிய உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான புதிய சிறப்பியல்பான முரண்பாட்டை ஏற்படுத்தி விடுகிறது. (இவ்விரு சிறப்பியல்பான முரண்பாடுகளிலும் சமுதாய இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்புகள் இருக்கின்றன.) இதுவே சமுதாய வளர்ச்சிப் போக்கையும் அதன் அடிப்படை முரண்பாட்டையும் குறிக்கிறது. எனவே உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டின் சிறப்பியல்பான தன்மையினாலேயே ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கும் அதன் அடிப்படை முரண்பாடுகளும் தீர்மானிக்கப் படுகின்றன என்பது தெளிவு. எடுத்துக்காட்டாகச் சொன்னால் முதலாளித்துவ சமுதாயத்தில் தனி உடைமைக்கும் உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் இடையிலான முரண்பாடே அடிப்படை முரண்பாடாகும். (இது வர்க்க அரங்கில் முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடாக வெளிப்படுகிறது) இம்முரண்பாடுகள் வர்க்க சமுதாய இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்பை (உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, அதன் வெளிப்பாடான வர்க்கப் போராட்டம்) தனது சிறப்பியல்புகளில் கொண்டுள்ளது. மேலும் இம்முரண்பாடே முதலாளித்துவ சமுதாயத்தின் சாராம்சத்தையும் தீர்மானிப்பதாய் இருக்கின்றது. இந்த முரண்பாடு



அந்த சமுதாயத்தில் நீடிக்கும் வரை மட்டுமே முதலாளித்துவ சமுதாய வளர்ச்சிப் போக்கும், இம்முரண்பாட்டால் தீர்மானிக்கப்பட்ட முதலாளித்துவ சமுதாய வளர்ச்சிப் போக்கின் (முதலாளித்துவ) சாராம்சமும் நீடிக்கும். இம்முரண்பாடு தீர்க்கப்படும் போது இந்த முதலாளித்துவ சமுதாய வளர்ச்சிப் போக்கு முற்றுப் பெறும். அதன் சாராம்சம் மறைந்து விடும். அதனால் தான் முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடாக தனி உடைமைக்கும், உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் இடையிலான முரண்பாடு (அதன் வெளிப்பாடு முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு) குறிப்பிடப் படுகிறது. தனி உடைமைக்கும், உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் இடையிலான அடிப்படை முரண்பாடு தீர்க்கப்படும் போது அதன் வெளிப்பாடாக வர்க்க அரங்கில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் தலையாய அம்சம் ( முதலாளி வர்க்கம்) மாறி விடுகிறது.

காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப் பிரபுத்துவ நாடுகளில் ஏகாதிபத்திய நிதி மூலதன ஆதிக்கமும், அரை நிலப்பிரபுத்துவ உறவுகளும் உள்நாட்டு தேசிய (முதலாளிய) உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. ஏகாதிபத்திய மூலதன ஆதிக்கமும், அரை நிலப்பிரபுத்துவ உறவுகளும் முற்றாக வெட்டி எறியப்படாமல் இந் நாடுகளில் தேசிய (முதலாளிய) உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி சாத்தியமில்லை; சமுதாயம் அடுத்த கட்டத்திற்கு மாறுவதும் சாத்தியமில்லை. இம்முரண்பாடு வர்க்க அரங்கில் ஏகாதிபத்தியத் திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடாகவும் நிலப்பிரபுத்துவத் திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடாக வும் வெளிப்படுகிறது. அதாவது காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி - அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் சமுதாய வளர்ச்சிப் போக்கு வர்க்க சமுதாய இயக்க வடிவத்தின் அனைத்தும் தழுவிய இயல்புகளை (உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு, அதன் வெளிப்பாடான வர்க்கப் போராட்டம்) வர்க்க அரங்கில் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய சிறப்பியல்பான முரண்பாடுகளில் கொண்டுள்ளது. மேலும் இம்முரண்பாடுகளே காலனி–அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ நாடுகளின் சாராம்சத்தையும்

படிப்பகம்

www.padippkam.com



தீர்மானிக்கின்றன. எனவே இம்முரண்பாடுகள் இச்சமுதாயங்களில் நீடிக்கும் வரை காலனிய – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாய வளர்ச்சிப் போக்குகள் இந்நாடுகளில் நீடிக்கும். இம்முரண்பாடுகளால் தீர்மானிக்கப்பட்ட இச்சமுதாய வளர்ச்சிப் போக்குகளின் சாராம்சமும் (நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சித் தன்மை இதற்கு எதிரானது காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவத் தன்மை) நீடிக்கும். இம்முரண்பாடுகள் தீர்க்கப்படும்போது இந்நாடுகளின் காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாய வளர்ச்சிப் போக்குகள் முற்றுப் பெற்றுவிடும். இம்முரண்பாடுகளால் தீர்மானிக்கப்பட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சமும் (ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சித் தன்மை, இதற்கு எதிரானது காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவத் தன்மை) மறைந்து விடும். எனவேதான் காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ நாடுகளின் சமுதாய வளர்ச்சிப் போக்குகளின் அடிப்படை முரண்பாடுகளாக நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடும், ஏகாதிபத்தியத் திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடும் குறிக்கப்படுகிறது.

முதலாளி வர்க்கத்திற்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டையும், ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான (அதன் பிரதிபலிப்பாக ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான) முரண்பாட்டையும் கூட சிலர் காலனி– அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ நாடுகளின் அடிப்படை முரண்பாடுகள் எனக் கருதுகின்றனர். இது தவறானதாகும். ஏனெனில் இந்நாடுகளின் சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சம் (ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சித் தன்மை இதற்கு எதிரானது காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவத் தன்மை) இம்முரண்பாடுகளால் தீர்மானிக்கப் படுவதில்லை. மேலும் காலனிய – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாய வளர்ச்சிப் போக்கு முற்றுப்பெறுவதும், அதன் சாராம்சம் மறைவதும் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இரு



அடிப்படை முரண்பாடுகளின் தீர்வைச் சார்ந்து உள்ளனவே தவிர மேற்கண்ட முரண்பாடுகளின் (முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு, ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு) தீர்வைச் சார்ந்த விசயமாய் இல்லை. மாறாக, அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படும் போதுதான் ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு தீர்கிறது. முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு முன் தள்ளப்படுகிறது. எனவே காலனி–அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி– அரை நிலப்பிரபுத்துவ நாடுகளின் அடிப்படை முரண்பாடுகளாக முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டையும், ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாட்டையும் சேர்ப்பது தவறானதாகும்.

மேலும் அடிப்படை முரண்பாட்டின் தீர்வு என்பது குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கின் சிறப்பியல்பான உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடும் அதன் சாராம்சமும் தீர்ந்து புதிய சிறப்பியல்பான உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடும் அதன் சாராம்சமும் கொண்ட புதிய சமுதாய வளர்ச்சிப் போக்கை குறிக்கிறது என்பதால் அது புரட்சியின் கட்டத்தை (Stage) தீர்மானிப்பதாகவும், சமுதாய மாற்றத்தைக் குறிப்பதாகவும் இருக்கிறது. உதாரணமாக தனி உடைமைக்கும் உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் இடையிலான முரண்பாடு தீர்வது முதலாளிய சமுதாயம் முடிவுறுவதையும் சோசலிச சமுதாயம் தோன்றுவதையும் குறிக்கிறது. அதனால் புரட்சியின் கட்டமும் மாற்றம் அடைகிறது. அதே போல் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய முரண்பாடுகளின் தீர்வு காலனிய – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப் பிரபுத்துவ சமுதாயம் முடிவுறுவதையும், புதிய ஜனநாயக சமுதாயம் தோன்றுவதையும் குறிக்கிறது. இதனால் புரட்சியின் கட்டமும் (Stage) மாற்றமடைகிறது. எனவே ஒரு சமுதாயத்தின் அடிப்படை முரண்பாட்டைப் பிழையின்றி தீர்மானிப்பது என்பது புரட்சியின் கட்டத்தைப் பிழையின்றி தீர்மானிக்க மிக மிக அவசியமாகும். அடிப்படை முரண்பாட்டைத் தவறாகத் தீர்மானித்தால் புரட்சியின் கட்டமும் அதனால் மூலவுத்தி உட்பட கட்சியின் அனைத்து நடவடிக்கைகளும் தவறாக வழி காட்டப்பட்டு தோல்வியுற நேரிடும்.

படிப்பகம்

www.padippkam.com



எனவே வர்க்க சமுதாயத்தின் அடிப்படை முரண்பாட்டைப்பற்றி தொகுப்பாகக் கீழ்க் கண்ட முடிவுகளுக்கு வர முடியும்.

1. ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் அடிப்படையாக இருக்கும் சிறப்பியல்பான உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டால் (அது வர்க்க அரங்கில் வர்க்கப் போராட்டமாக வெளிப்படுகிறது) தீர்மானிக்கப்படுகிறது.
2. இம்முரண்பாடு அந்த சமுதாய வளர்ச்சிப் போக்கு முழுவதும் நின்று நிலவுகிறது. அந்த சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தைத் தீர்மானிக்கிறது.
3. இம்முரண்பாடு தீர்க்கப்பட்டவுடன் குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கு முற்றுப்பெறுகிறது. அதன் சாராம்சம் மறைகிறது. புதிய சமுதாய சாராம்சம் முன்னணிக்கு வருகிறது. அதாவது உற்பத்தி சக்தியின் வளர்ச்சிக்கு நிலவும் உற்பத்தி உறவுகளை மாற்றுவது அவசியமாகி அந்த உற்பத்தி உறவுகள் மாற்றப்பட்டு புதிய உற்பத்தி உறவுகள் அமைக்கப்படும் போது, புதிய சமுதாய வளர்ச்சிப் போக்கும், புதிய அடிப்படை முரண்பாடும் அதன் சாராம்சமும் தோன்றுகின்றன.
4. எனவே அடிப்படை முரண்பாடு என்பது சமுதாய மாற்றத்துடன் இணைந்துள்ளதாகவும், புரட்சியின் கட்டத்தையும் தன்மையையும் தீர்மானிப்பதாகவும் இருக்கிறது.

**2**

# முதன்மை முரண்பாடும், சமுதாயத்தில் முதன்மை முரண்பாடும்

ஒரு நீண்ட வளர்ச்சிப் போக்கில் அதன் அடிப்படை முரண்பாடுகளின் இரு அம்சங்களுக்கு இடையே நடக்கும் போராட்டங் களின் விளைவாகவும், அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றின் மீதான ஒன்றின் பாதிப்பினாலும் இவ்விரு அம்சங்களின் தீவிரமும்,தலையாய அம்சத்தின் தலையாய தன்மையின் அளவும் மாறுபடுகின்றன. இதுவும், இதனால் ஏற்படும் புதிய முரண்பாடுகளின் தோற்றமும், மற்றும் பிற முரண்பாடுகளின் மீது ஏற்படும் பாதிப்புகளும், இவற்றுக்கிடையிலான



உள்ளுறவுகளால் ஏற்படும் விளைவுகளும் இவ்வளர்ச்சிப் போக்கில் பல இடைக் கட்டங்கள் ஏற்படக் காரணமாகின்றன. ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் (Phase or sub stage) நிலவும் பல்வேறு முரண்பாடுகளில் எந்த முரண்பாடு பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதாகவும் அவற்றின் மீது செல்வாக்கு செலுத்துவதாகவும் இருக்கிறதோ அந்த முரண்பாடு அந்த இடைக் கட்டத்தின் முதன்மை முரண்பாடு ஆகும்.

ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கில் அடிப்படை முரண்பாடுகளின் இரண்டு அம்சங்களும் வர்க்க அரங்கில் (குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கு முடிவுறும் வரையிலான; புரட்சியின் காலகட்டம் முழுமைக்குமான) புரட்சிகர வர்க்கங்களையும், எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களையும் உள்ளடக்கி உள்ளன. இரண்டு அம்சங்களில் ஒரு அம்சம் புரட்சிகர வர்க்கங்களையும், மற்றொரு அம்சம் எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களையும் குறிக்கின்றன. எனவே வர்க்க சமுதாயத்தின் அடிப்படை முரண்பாட்டின் இரு அம்சங்களுக்கும் இடையிலான போராட்டம் என்பது வர்க்கப் போராட்டமாக, புரட்சிகர வர்க்கங்களுக்கும் எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களுக்கும் இடையிலான போராட்டமாக இருக்கிறது. ஒரு நீண்ட சமுதாய வளர்ச்சிப் போக்கில் இவ்விரு அம்சங்களுக்கும் இடையிலான போராட்டம் மேலும், மேலும் தீவிரம் அடைகிறபோது இவ்விரு அம்சங்களின் தீவிரமும், இவ்விரு அம்சங்களில் தலையாய அம்சத்தின் தலையாயத் தன்மையின் அளவும் மாறுபடுகின்றது. அதுமட்டுமின்றி அடிப்படை முரண்பாட்டின் தீவிரத்தன்மை அச்சமுதாய வளர்ச்சிப் போக்கிலுள்ள பிற முரண்பாடு களையும் பாதிக்கிறது. அம்முரண்பாடுகளில் சில தீவிரம் அடையவும், சில தற்காலிகமாகத் தீரவும், சில தீவிரம் குறையவும், சில புதிய முரண்பாடுகள் தோன்றவும் காரணமாகிறது. இவற்றாலும், இம்முரண்பாடுகளுக்குள் ஏற்படும் உள்ளுறவுகளாலும் குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடுகள் மாறாமல் இருக்கும் போதே சில இடைக் கட்டங்கள் ஏற்படுகின்றன. இவ்வகை இடைக் கட்டங்களில் ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் நிலவும் பல்வேறு முரண்பாடுகளில் எந்த முரண்பாட்டின் வாழ்வும், வளர்ச்சியும் பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதாகவும், அவற்றில் செல்வாக்கு செலுத்துவதாகவும் இருக்கிறதோ அந்த முரண் பாடு அந்த இடைக் கட்டத்தின் முதன்மை முரண்பாடாக இருக்கிறது.

படிப்பகம்

www.padippkam.com



எனவே முதன்மை முரண்பாடு என்பது அடிப்படையிலேயே அடிப்படை முரண்பாட்டிலிருந்து வேறுபடுகிறது. அடிப்படை முரண்பாடு ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தை தீர்மானிக்கின்ற சிறப்பியல்பான உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டிலிருந்து தீர்மானிக்கப் படுகிறது. அந்த அடிப்படையில் முதன்மை முரண்பாடு தீர்மானிக்கப் படுவது இல்லை. மாறாக ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் பிற முரண்பாடுகளின் வாழ்வு, வளர்ச்சியின் மீது அது செலுத்தும் செல்வாக்கையும், தீர்மானகரமான பங்கையும் வைத்தே தீர்மானிக்கப் படுகிறது. இதனால் பல சமயங்களில் – பல இடைக் கட்டங்களில் – அடிப்படை முரண்பாடு அல்லாத பிற முரண்பாடுகள் கூட முதன்மை முரண்பாடுகளாக மாறுகின்றன.

உதாரணமாக காலனி, அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ சீனத்தில் அடிப்படை முரண்பாடுகளாக ஏகாதிபத்தியத்திற்கும் சீனத்தில் உள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் அனைத்துக்கும் (தேசத்துக்கும்) இடையிலான முரண்பாடும், நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் இருந்தன. அதனுடன் கூடவே பாட்டாளி வர்க்கத்துக்கும், முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடும் பல்வேறு பிற்போக்கு ஆளும் வர்க்கக் கும்பல்களுக்கு இடையிலுள்ள முரண்பாடும், விவசாயிகள் மற்றும் நகர்ப்புற குட்டி முதலாளிகளுக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடும் என்று வேறு பல முரண்பாடுகளும் நிலவின. அரைக் காலனிய – அரை நிலப்பிரபுத்துவ சீனத்தின் சமுதாய வளர்ச்சிப் போக்கு முழுமையிலும் அடிப்படை முரண்பாடுகளான நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடு, தேசத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாடு ஆகியவை மாறவில்லை; சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்திலும் (ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சித் தன்மை; அதற்கு எதிரான அரைக் காலனி–அரை நிலப் பிரபுத்துவத் தன்மை) எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் அடிப்படை முரண்பாடுகளின் அம்சங்களில் ஏற்பட்ட தீவிரத் தன்மையால் சில முரண்பாடுகள் தீவிரமடைந்தன. (உ.ம். நிலப் புரட்சி யுத்தம், வடகிழக்கு மாகாணங்கள் மீதான ஜப்பானிய ஆக்கிரமிப்பு, கோமிண்டாங் பிற்போக்குக் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் தொடுத்த கம்யூனிஸ்ட் எதிர்ப்பு உள்நாட்டு யுத்தம்) சில முரண்பாடுகள் தற்காலிகமாக அல்லது அரைகுறையாகத் தீர்ந்தன. (உ.ம். வட யுத்தப் பிரபுக்களின் அழிவும் நிலப்பிரபுக்களின் நிலம் கம்யூனிஸ்டுகளால் பறித்து எடுக்கப்பட்டதும், ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் தோல்வி) இன்னும் சில முரண்பாடுகள் தோன்றின. (உ.ம். புதிய யுத்தப் பிரபுக்களிடையே மோதல்கள், தெற்கில் கம்யூனிஸ்டுகள் புரட்சித் தளப் பிரதேசங்களை இழந்த பின்னர் நிலப்பிரபுக்கள் மீண்டும் நிலத்தை கைப்பற்றியது) இதனால் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சீன சமுதாய வளர்ச்சிப் போக்கு நான்கு இடைக் கட்டங்களைக் கொண்டதாக இருந்தது. அவை 1. வடக்குப் படையெடுப்பு 2. விவசாயப்புரட்சி யுத்தம் 3. ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தம் 4. மூன்றாவது புரட்சிகர உள்நாட்டு யுத்தம்.



இந்நான்கு இடைக் கட்டங்களிலும் காலனிய, அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சீன சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு களோ, அம்முரண்பாடுகளால் தீர்மானிக்கப்பட்ட சீன சமுதாயத்தின் வளர்ச்சிப் போக்கின் சாராம்சமோ மாறவில்லை. ஆனால் எல்லா இடைக் கட்டங்களிலும் பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிக்கின்ற அவற்றின் மீது செல்வாக்கு செலுத்துகின்ற முதன்மை முரண்பாடாக, ஒரே முரண்பாடு இல்லை. மாறாக ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் குறிப்பான நிலைமைகளுக்கு ஏற்ப முதன்மை முரண்பாடு மாறியது. வடக்குப் படையெடுப்பின் போதும், விவசாயப் புரட்சி யுத்தத்தின் போதும் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாய் இருந்தது. பின் ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்த காலத்தில் முதன்மை முரண்பாடு ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கும் சீன தேசத்திற்கும் இடையிலான முரண்பாடாக மாறியது. (ஆதாரம் : மாவோ– ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு காலகட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் கடமைகள்) மூன்றாவது புரட்சிகர உள் நாட்டு யுத்தகாலத்தில் பெரு நிலப்பிரபு வர்க்கம் மற்றும் பெரு முதலாளி வர்க்கத்துக்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகியது. (ஆதாரம் : நவ சீனப் புரட்சியின் வரலாறு, ஹோ கான்-சி, அயல்மொழிப் பதிப்பகம், பீகிங் 1959, பக்கம் 226) அதாவது காலனிய, அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சீன சமுதாயத்தின் நான்கு இடைக் கட்டங்களில் மூன்று முதன்மை முரண்பாடுகள்

படிப்பகம்

www.padippkam.com



செயல்பட்டிருக்கின்றன. அவற்றில் இரண்டு அடிப்படை முரண்பாடுகளாய் இல்லை. எனவே ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கு முழுமையிலும் – அது முற்றுப் பெறும் வரையிலும் – ஒரே முரண்பாடுதான் முதன்மை முரண்பாடாக இருக்கும் என்றோ, அல்லது அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றே முதன்மை முரண்பாடாக இருக்கும் என்றோ கருத முடியாது என்பது தெளிவு.

3

## சமுதாயத்தில் முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிப்பது எப்படி?

ஒரு சிக்கலான வளர்ச்சிப் போக்கில் நிலவும் பல்வேறு முரண்பாடுகளில் எந்த முரண்பாடு பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதாகவும், அவற்றின் மீது செல்வாக்கு செலுத்துவதாகவும் இருக்கிறதோ அந்த முரண்பாடே முதன்மை முரண்பாடாகும் என்பது மாவோவின் கருத்து. இக்கருத்தையே ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கில் உள்ள முரண்பாடுகளில் முதன்மை முரண்பாட்டைக் கண்டறிவதற்கு ஒரு புரட்சிகரக் கட்சி பிரயோகிக்க வேண்டும்.

ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாட்டைக் கண்டறிந்தவுடன் ஒரு புரட்சிகரக் கட்சி புரட்சியின் கட்டத்தையும், புரட்சிகர மற்றும் எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களையும் தெளிவாகப் பிரித்தறிந்து விடுகிறது. உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்ட பிற்போக்கான உற்பத்தி உறவுகளை அழித்துவிட்டு முற்போக்கான உற்பத்தி உறவுகளை நிலை நாட்ட வேண்டுமானால் புரட்சிகர வர்க்கங்கள் ஒன்று திரண்டு எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களை வீழ்த்துவது அவசியமாகும். பிற்போக்கான உற்பத்தி உறவுகளின் படைகளாக எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களும், முற்போக்கான உற்பத்தி உறவுகளின் படைகளாக புரட்சிகர வர்க்கங்களும் நிற்பதால் புரட்சிகரக் கட்சி புரட்சிகர வர்க்கங்களை அணிதிரட்டி எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களை எதிர்த்துப் போராடுகிறது.



ஆனால் எதிர்ப் புரட்சிகர வர்க்கங்கள் தமது பிற்போக்கான உற்பத்தி உறவுகளைக் கட்டிக்காப்பதற்கு பல்வேறு வகையான (அரசியல், கலாச்சார) நிறுவனங்களை அமைத்து உள்ளன. அவற்றில் முதன்மையானது அரசியல் அதிகார அமைப்புகள் ஆகும். எனவே புரட்சிகர வர்க்கங்கள் பிற்போக்கான உற்பத்தி உறவுகளை அழித்து விட்டு முற்போக்கான உற்பத்தி உறவுகளை நிலை நிறுத்த வேண்டுமானால் முதலாவதாக எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களின் அரசியல் அதிகாரத்தை – அரசியல் அதிகார நிறுவனங்களை– நொறுக்கி எறிவதையும், தமது சொந்த புரட்சிகர அரசியல் அதிகாரத்தை – அரசியல் அதிகார நிறுவனங்களை – நிறுவுவதையும் முதன்மையான கடமையாக எதிர் கொள்கின்றன.

அதாவது ஒரு சமுதாயத்தில் பொருளாதாரம் (பொருளுற்பத்தி முறை) என்பது அடித்தளமாகவும் அரசியல் என்பது மேல் கட்டுமானமாகவும் இருப்பினும் பொருளாதார வளர்ச்சிக்கு எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களின் அரசியல் அதிகாரம் தடையாகி விடும்போது அந்த வர்க்கங்களின் அரசியல் அதிகாரம் மாற்றப்படவேண்டியது முதன்மையானதாகவும், தீர்க்கமானதாகவும் ஆகி விடுகிறது. இந் நிலையில் அரசியல் அதிகாரத்தை தம் கையில் கொண்டிருக்கும் பிற்போக்கு எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களுக்கும், அந்த அதிகாரத்தை நொறுக்கி எறிந்து விட்டு தமது புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் முற்போக்கான புரட்சிகர வர்க்கங்களுக்கும் இடையிலான முரண்பாடே அப்போது சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளில் முதன்மை முரண்பாடாக இருக்கிறது. ஆனால் நீண்ட சமுதாய வளர்ச்சிப் போக்கில் நடக்கும் வர்க்க முரண்பாடுகளின் தீவிரத்தால் புரட்சி, எதிர்ப் புரட்சி முகாம்களின் வர்க்கச் சேர்க்கையில் அணி வகுப்பில் ஏற்படும் மாற்றம் பல சமயங்களில் அரசியல் அதிகார வகையில் பண்பு வகைப் பட்ட மாற்றங்களுக்குக் காரணமாகின்றன. உதாரணமாக, காலனிய ஆட்சி, முதலாளி வர்க்க (ஜனநாயகம்) ஆட்சி, பாசிசம், முதலாளிகள்- நிலப்பிரபுக்கள் ஆட்சி, நிலப்பிரபுத்துவ ஆட்சி போன்றவை ஆட்சி அதிகார வகையில் பண்பு வகைப்பட்ட மாற்றங்கள் ஆகும். இத்தகைய நிலைமைகளில் குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடுகள் மாறாமல் இருக்கும் போது கூட முதன்மை முரண்பாடுகள் மாறிவிடுகின்றன. பாசிச ஆட்சியில் பாசிச சக்திகளுக்கும் பரந்துபட்ட ஜனநாயக சக்திகளுக்கும்

படிப்பகம்

www.padippkam.com



இடையிலான முரண்பாடும், காலனிய ஆட்சியில் (ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பில்) குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்துக்கும் இடையிலான முரண்பாடும், முதலாளிய (ஜனநாயக) ஆட்சியில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடும், முதலாளிகள்- நிலப்பிரபுக்கள் ஆட்சியில் அவ்வர்க்கங் களுக்கும், பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடும், நிலப்பிரபுத்துவ ஆட்சியில் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் முதன்மை முரண்பாடுகளா கின்றன. ஏனெனில் இத்தகைய நிலைமைகளில் இந்த முரண்பாடுகள் தீராமல் பிற முரண்பாடுகளின் தீர்வு சாத்தியமில்லை என்பதால் பிற முரண்பாடுகளின் வாழ்வும் வளர்ச்சியும் இம்முரண்பாட்டால் தீர்மானிக்கப் படுபவையாகவும் அதனால் செல்வாக்கு செலுத்தப் படுபவையாகவும் இருக்கின்றன.

எனவே சமுதாய மாற்றத்திற்கு திட்டமிட்டு செயல்படும் ஒரு புரட்சிகரக் கட்சி வீழ்த்தவேண்டிய அரசியல் அதிகாரத்தையும், நிறுவவேண்டிய அரசியல் அதிகாரத்தையும் பற்றி எப்போதும் முதன்மையான கவனம் செலுத்துகிறது; ஒரு புரட்சிகரக் கட்சிக்கு ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கில் முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிப்பதற்கான அடிப்படையாகவும் இதுவே இருக்கிறது.

முதலாளித்துவ சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடான முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு மட்டுமின்றி மிச்சசொச்ச நிலப்பிரபு வர்க்கத்துக்கும், முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு, பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயி, குட்டி முதலாளி வர்க்கத்துக்கும், முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாடு என்று இவ்வாறு பல்வேறு முரண்பாடுகள் நிலவுகின்றன. முதலாளிய சமுதாயத்தின் ஒரு நீண்ட வளர்ச்சிப் போக்கில் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமான முரண்பாடு தீவிரம் அடையும்போது இவ்விரு அம்சங்களின் வர்க்க இயல்பிலோ முதலாளித்துவ சமுதாயத்தின் சாராம்சத்திலோ எவ்வித மாற்றமும் ஏற்படாமலேயே சில புதிய முரண்பாடுகள் தோன்றுகின்றன; சில முரண்பாடுகள் தீவிரம் அடைகின்றன. உதாரணமாக ஏகபோக மூலதனத்திற்கும், ஏகபோகமற்ற மூலதனத்திற்கும் இடையே முரண்பாடு தோன்றுகிறது. காலனித்துவ வல்லரசுகளுக்கும் காலனி நாடுகளுக்கும் இடையே முரண்பாடு



தீவிரமடைகிறது. முதலாளித்துவ நாடுகளுக்கிடையிலான முரண்பாடு அதாவது அவற்றின் சமத்துவமற்ற வளர்ச்சியிலிருந்து தோன்றிய முரண்பாடு கூர்மையுடன் வெளிப்படுகிறது. இத்தகைய நிலைமைகளில் எதிர்ப் புரட்சி முகாம்களின் வர்க்கச் சேர்க்கையால் அணி வகுப்பில் ஏற்படும் மாற்றம் அரசியல் அதிகார வகையில் பண்பு வகையில் மாற்றம் ஏற்படக் காரணமாகின்றன. முதலாளித்துவ ஜனநாயகத்தில் ஆளும் வர்க்கங்களில் பாசிச சக்திகள் வளர்ந்து உள்நாட்டில் பாசிசம் ஆட்சி பீடம் ஏறிடலாம். அதனால் முதலாளித்துவ ஜனநாயக சக்திகள் புரட்சிகர முகாமுக்கு தள்ளப் படலாம். அல்லது காலனி ஆதிக்கத்திற்காக ஏகாதிபத்தியங்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகலாம். இதனால் உள்நாட்டு முதலாளி வர்க்கம் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்புக் காக புரட்சிகர முகாமுக்குத் தள்ளப் படலாம். இவை ஆட்சி அதிகார வகையில் ஏற்படும் பண்பு வகை மாற்றங்கள் ஆகும். எனவே இத்தகைய நிலைமைகளில் – பாசிசம் தோன்றும் போது பாசிசத்திற்கும் பரந்துபட்ட ஜனநாயக சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் போது ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடும் முதன்மை முரண்பாடுகளாகின்றன. ஏனெனில் பாசிச ஆட்சியின் கீழ் பாசிச சக்திகளின் ஆட்சியதிகாரம் தூக்கி எறியப்படாமல் அச்சமுதாயத்தில் நிலவும் பிற முரண்பாடுகளைத் தீர்க்க முடியாது என்பதாலும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் போது ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை முறியடிக்காமல் அச்சமுதாயத்தின் பிற முரண்பாடுகளை தீர்க்க முடியாது என்பதாலும் இம்முரண்பாடுகள் அப்போது நிலவும் பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பவையாக இருக்கின்றன. இத்தகைய நிலைமைகள் ஏற்படாத போது முதலாளித்துவ சமுதாயம் முழுவதிலும் முதலாளி வர்க்க ஆட்சி அதிகாரத்தைத் தூக்கி எறிந்து விட்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது என்ற கடமையே தொடர்ந்து இருந்து வருகிறது. மேலும் அரசியல் அரங்கில் முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான முரண்பாட்டின் தீர்வே பிற முரண்பாடுகளின் தீர்வுக்கு வழி வகுப்பதாக இருப்பதோடு இம் முரண்பாடே பிற முரண்பாடுகளின் வாழ்வையும், வளர்ச்சியையும் தீர்மானிப்பதாகவும் அவற்றில் செல்வாக்கு செலுத்துவதாகவும் இருக்கிறது. எனவே முதலாளித்துவ சமுதாயம் முழுவதும் அதனுடைய முதன்மை முரண்பாடாக பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்குமான முரண்பாடே இருக்கிறது. இம்முரண்பாட்டின் தீர்வு முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படை

படிப்பகம்

www.padippkam.com



முரண்பாட்டையே தீர்ப்பதாகவும், சமுதாயத்தை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்வதாகவும் இருக்கிறது.

சிக்கலான, நீண்ட வளர்ச்சிப் போக்கு கொண்ட ஒரு சமுதாயத்தில் அந்த வளர்ச்சிப் போக்கு முழுவதிலும் அடிப்படை முரண்பாடு மாறாமல் இருக்கும் போதே அரசியல் அதிகாரம் என்பது எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்கங்களிடையே அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சினை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. அதாவது அடிப்படை முரண்பாடு களின் அடிப்படையில் புரட்சிகரமாய் இருந்த ஒரு வர்க்கம் தற்காலிக மாக எதிர்ப் புரட்சி முகாமுக்கோ, எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களின் ஒரு பிரிவு புரட்சிகர முகாமுக்கோ மாறுகின்றன. சில சமயங்களில் புரட்சி, எதிர்ப் புரட்சி முகாம்களின் வர்க்கச் சேர்க்கையிலும், அணி வகுப்பிலும் ஏற்படும் மாற்றம் அரசியல் அதிகார வகையிலும் பண்பு வகை மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகைய நிலைமைகளில் ஒரு புரட்சிகரக் கட்சி பருண்மையான ஆய்வுகள் மூலம் புரட்சி, எதிர்ப் புரட்சி முகாம்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை ஆய்வு செய்து வர்க்கச் சேர்க்கையிலும் அணி வகுப்பிலும் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களையும் அதனால் அரசியல் அதிகார வகையில் பண்பு வகையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களையும் கண்டறிய வேண்டும். இவ்வாய்விலிருந்து முதன்மை முரண்பாட்டையும் புரட்சியின் உடனடி தாக்குதல் இலக்கையும், தூக்கி எறியப்பட வேண்டிய வர்க்கங்களின் அரசியல் அதிகாரத்தையும், நிறுவப்பட வேண்டிய புரட்சிகர அரசியல் அதிகாரத்திற்கான வர்க்கங்களையும் பருண்மையாக கண்டறிந்து, புரட்சிகர ஐக்கிய முன்னணியைக் கட்டி, புரட்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு செய்வது சமுதாயத்தின் அடிப்படை முரண்பாட்டைத் தீர்ப்பதாக இருக்காவிடினும் அடிப்படை முரண்பாடுகளின் தீர்வைத் துரிதப் படுத்துவதாகவும், சமுதாய மாற்றத்தை அருகில் கொண்டு வருவதாகவும் அதாவது புரட்சிகர சக்திகளை பலப் படுத்துவதாகவும், எதிர்ப் புரட்சிகர சக்திகளை பலவீனப் படுத்துவதாகவும் இருக்கும். இத்தகைய பருண்மையான ஆய்வுகள் மூலம் முதன்மை முரண்பாட்டைக் கண்டறியாவிடில் எதிர்ப் புரட்சி மற்றும் புரட்சிகர வர்க்கங்களிடையே வர்க்கச் சேர்க்கை மற்றும் அணி வகுப்பில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்துகொள்ளவோ, புரட்சிகர வர்க்கங்களுக்குள் இருக்கும் முரண்பாடுகளைச் சரியாக கையாளவோ, எதிர்ப் புரட்சி வர்க்கங்கள்



இடையே இருக்கும் முரண்பாடுகளை புரட்சியின் நலனுக்கு பிழையின்றி பயன்படுத்திக் கொள்ளவோ ஒரு புரட்சிகரக் கட்சியினால் இயலாமல் போகும். இதனால் அடிப்படை முரண்பாடுகளின் தீர்வையும், சமுதாய மாற்றத்தையும் துரிதப்படுத்த முடியாமல் போகும். புரட்சிகர சக்திகளை பலப்படுத்தவும், எதிர்ப் புரட்சிகர சக்திகளைப் பலவீனப் படுத்தவும் இயலாமல் போகும்.

ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கில் புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களின் வர்க்கச் சேர்க்கையில், அணி வகுப்பில் ஏற்படும் மாற்றம் பண்பு வகையில்(அரசியல் அதிகார வகையில்) எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் இருக்கும் போது முதன்மை முரண்பாட்டை கண்டறிவதும் அதை ஒரு புரட்சியின் மூலம் தீர்ப்பதும் அச்சமுதாயத்தின் அடிப்படை முரண்பாட்டையே தீர்க்கவும், அச்சமுதாயத்தை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்லவும் பயன்படுகிறது. அதே நேரத்தில் ஒரு நீண்ட சமுதாய வளர்ச்சிப் போக்கில் புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களில் வர்க்கச் சேர்க்கையிலும், அணி வகுப்பிலும் ஏற்படும் மாற்றம் அரசியல் அதிகார வகையில் பண்பு வகை மாற்றத்தை ஏற்படுத்தி, அதனால் முதன்மை முரண்பாடுகள் பருண்மையான நிலைமைகளில் மாறும்போது, அம்முரண்பாடுகளைக் கண்டறிந்து தீர்ப்பது அந்த சமுதாயத்தின் அடிப்படை முரண்பாட்டின் தீர்வை துரிதப்படுத்துவதாகவும், புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்வதாகவும் அமைகிறது. அதாவது எதிர்ப் புரட்சி வர்க்கங்களை பலவீனப்படுத்தி புரட்சிகர வர்க்கங்களின் சக்திகளைப் பலப்படுத்தப் பயன்படுகிறது.

உதாரணமாக காலனிய, அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சீன சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளின் படி ஏகாதிபத்தியங் களும் அவற்றின் உள்நாட்டு ஏஜெண்டுகளும் நிலப்பிரபு வர்க்கமும் எதிர்ப் புரட்சி வர்க்கங்களாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு வர்க்கங்கள் அனைத்தும் புரட்சிகர வர்க்கங்களாகும். ஆனால் காலனிய, அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சீனத்தின் சமுதாய வளர்ச்சிப் போக்கு நீண்டதாகவும், பல்வேறு முரண்பாடு களைக் கொண்டதாகவும், சிக்கலானதாகவும் இருந்தது. அடிப்படை முரண்பாடுகள் மற்றும் அடிப்படை முரண்பாடுகளின் இரு அம்சங் களின் தீவிரத் தன்மையால் வர்க்க அரங்கில் ஏற்பட்ட மாற்றங்களால் (அடிப்படை முரண்பாடுகளும் அவற்றின் இரண்டு அம்சங்களின்

படிப்பகம்

www.padippkam.com



இயல்பும், சாராம்சமும் மாறாமலேயே) புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களில் சில மாற்றங்கள் அவ்வப்போது ஏற்பட்டன. அவற்றை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அவ்வப்போதைய பருண்மையான ஆய்வுகள் மூலம் குறிப்பிட்ட நிலைமைகளில் நிலவும் புரட்சியின் நண்பர்களையும், எதிரிகளையும் தீர்மானித்து சரியான ஐக்கிய முன்னணியையும், முழக்கங்களையும் கணித்து புரட்சியை முன்னெடுத்துச் சென்றது. அதாவது ஒவ்வொரு பருண்மையான நிலைமைகளிலும் பருண்மையான ஆய்வில் ஈடுபடாமல் இருந்திருந்தால் சீனக்கட்சியால் சரியான ஐக்கிய முன்னணி தந்திரத்தையோ, முழக்கங்களையோ வடித்து புரட்சியை வெற்றி நோக்கி – சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடுகளின் தீர்வை நோக்கி இட்டுச் சென்றிருக்க முடியாது.

குறிப்பாக வடக்குப் படையெடுப்பு இடைக் கட்டத்தில் தேசிய முதலாளிகள் புரட்சிகர முகாமிலேயே இருந்தனர். புரட்சிகர இயக்கம், நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்களின் ஆதிக்கத்தின் கீழ் சிதறுண்டிருந்த சீனத்தை ஐக்கியப்படுத்தும் கடமையையும் நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்களின் ஆட்சி அதிகாரம் மற்றும் அவர்களுக்கு பொருளாலும், இராணுவத்தாலும் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி அவர்களைத் தமது ஏஜெண்டுகளாக இயக்கிக் கொண்டிருந்த ஏகாதிபத்தியம் ஆகியவற்றை தூக்கி எறிந்து தேசிய சுதந்திரத்தை நிலை நாட்டும் கடமையையும் எதிர் கொண்டிருந்தது. இக்கடமையினை நிறை வேற்றுவதில் தேசிய முதலாளி வர்க்கமும் இணைந்து நின்றதால் அவ்வர்க்கத்தையும் இணைத்த புரட்சிகர தேசிய ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டி தேசிய சுதந்திரம் மற்றும் தேசிய ஐக்கியம் என்ற முழக்கங்களின் அடிப்படையில் புரட்சிப் போர் தொடுத்தது. எதிர்ப் புரட்சி முகாமில் நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபு வர்க்கமும், அமெரிக்கா, பிரிட்டிஷ், ஜப்பான் போன்ற பல்வேறு ஏகாதிபத்தியங்களும் அவற்றின் தரகு வர்க்கங்களும் இருந்தபோதிலும் முதன்மை எதிரியாக நிலப்பிரபுத்துவம் தேர்ந் தெடுக்கப்பட்டது. ஏனெனில் ஏகாதிபத்தியம் அவ்வப்போது இராணுவத் தலையீடுகள் செய்வது, யுத்தப் பிரபுத்துவ வர்க்கங்களை ஏஜெண்டுகளாக்கிக் கொண்டு சீனத்தின் பகுதிகளைத் தமது செல்வாக்கின் கீழ் கொண்டு வருவது ஆகியவற்றில் ஈடுபட்டாலும் அதற்கு மையமாக இருந்தது நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்களின் கையில் ஆட்சி அதிகாரம் இருந்ததேயாகும். தரகு வர்க்கம் ஏகாதி பத்தியங்களிடமிருந்து பிரிக்க முடியாத ஏகாதிபத்திய ஏஜெண்டு



வர்க்கமாக இருந்தது. நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுத்துவ வர்க்கத்தின் அரசியல் அதிகாரத்தைத் தூக்கி எறிவதன் மூலமே (அதுவும் பல்வேறு பகுதிகளில் பல்வேறு யுத்தப் பிரபுக்கள் ஆட்சி செலுத்தினர்) சீனத்தை ஐக்கியப் படுத்த முடியும்; ஏகாதிபத்தியத்தையும் அதன் ஏஜெண்டு களையும் முறியடிக்க முடியும் என்பதால் சீனக்கட்சி தனது முதன்மை இலக்காக நிலப்பிரபுத்துவத்தைத் தேர்ந்தெடுத்து அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு வர்க்கங்களையும் கொண்ட புரட்சிகர தேசிய ஐக்கிய முன்னணியைக் கட்டியது. ஐக்கியம், சுதந்திரம் என்ற முழக்கத்தை முன் வைத்தது. தேசிய முதலாளிகளின் தலைமையில், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் உதவியுடன் வூகானில் புரட்சிகர அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்ததால் அது புரட்சியின் தளமாகப் பயன்பட்டது. அதிலிருந்து வட யுத்தப் பிரபுக்களின் மீது புரட்சிகர இராணுவம் படையெடுத்துச் சென்று ஒவ்வொரு யுத்தப் பிரபுவாக வீழ்த்தியது. (பின்னர் தேசிய முதலாளிகளின் துரோகத்தால் புரட்சி தோல்வியுற்றது. எனினும் சீனப் புரட்சியின் வெற்றிக்கு அது மாபெரும் ஒத்திகையாக இருந்தது.) இக்கட்டத்தின் முதன்மை முரண்பாடாக நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடு குறிக்கப்பட்டதற்குக் காரணம் எதிர்ப் புரட்சிகர முகாமில் தலைமையில் நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்கள் இருந்ததால் அவர்களுடைய அரசியல் அதிகாரத்தை வீழ்த்தி பரந்துபட்ட சீன மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவுவதன் மூலமே நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுத்துவ வர்க்கத்தை மட்டுமின்றி ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்திய ஏஜெண்டுகளையும் புரட்சிகர இயக்கம் தூக்கியெறிய முடியும் என்பதாலும், அதை பரந்துபட்ட சீன மக்களின் ஒருங்கிணைந்த அரசியல் இராணுவ நடவடிக்கைகளால் மட்டுமே சாதிக்க முடியும் என்பதாலுமே ஆகும். அதாவது நிலப் பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடே அப்போது நிலவிய பிற முரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் தீர்மானிப்பதாக இருந்ததாலும், அவற்றின் மீது செல்வாக்கு செலுத்துவதாக இருந்ததாலும் அதுவே, அந்த இடைக் கட்டத்தின் முதன்மை முரண்பாடாகக் குறிக்கப்பட்டது.

இரண்டாவது இடைக் கட்டத்தில் (விவசாயப் புரட்சி யுத்த காலத்தில்) தேசிய முதலாளிகளில் ஒரு பகுதியினர் எதிர்ப் புரட்சிகர முகாமில் சேர்ந்து விட்டதால் புரட்சி, எதிர்ப் புரட்சி முகாம்களின் வர்க்கச்

படிப்பகம்

www.padippkam.com



சேர்க்கையில் மாற்றம் ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சி இந்த பருண்மையான நிலைமையை ஆய்வு செய்து தொழிலாளர் – விவசாயிகள் குடியரசு என்ற முழக்கத்தை முன் வைத்து, விவசாயப் புரட்சி யுத்தத்தைத் தொடுத்தது. இவ்விடைக் கட்டத்தில் புரட்சி எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களின் வர்க்கச் சேர்க்கையில், அணி வகுப்பில் மாற்றம் ஏற்பட்டிருப்பினும் அது ஆட்சி அதிகார வகையில் பண்பு வகையான மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதால் முதன்மை முரண்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. ஏனெனில் இப்போதும் நிலப்பிரபுத்துவ அரசியல் அதிகாரத்தை வீழ்த்துவதுதான் புரட்சிகர மக்களின் அதிகாரத்தை நிறுவுவதற்கான அடிப்படையாக இருந்தது. மற்ற முரண்பாடுகளின் வாழ்வும், வளர்ச்சியும் இதனால் தீர்மானிக்கப் படுவதாகவே இருந்தது.

மூன்றாவது இடைக் கட்டத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீனத்தைக் காலனியாக்குவதற்காக ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்த வுடன் ஜப்பான் ஏகாதிபத்தியம் புரட்சியின் முதன்மை எதிரியாகியது. தேசிய முதலாளி வர்க்கம் புரட்சிகர வர்க்க முகாமில் சேரும் வாய்ப்பும் ஏற்பட்டது. எதிர்ப் புரட்சி வர்க்க முகாமில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் முதன்மை எதிரியாகியதால் அதனுடன் முரண்பாடு கொண்ட பிற எதிர்ப் புரட்சி சக்திகள் கூட (பிற ஏகாதிபத்தியங்களும் அவற்றின் ஏஜெண்டுகளும்) புரட்சியின் முகாமில் தற்காலிகமாக சேரும் வாய்ப்பேற்பட்டது. இதனால் புரட்சி, எதிர்ப் புரட்சி முகாமில் மீண்டும் வர்க்கச் சேர்க்கையில், அணி வகுப்பில் மாற்றம் ஏற்பட்டது. இதைப் பருண்மையாக ஆய்வு செய்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி பரந்துபட்ட, ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டும் தந்திரத்தை முன் வைத்தது; தேசிய முதலாளிகளையும் உள்ளடக்கிய மக்கள் குடியரசு என்ற முழக்கத்தை முன் வைத்தது. இக்கட்டத்தில் ஜப்பான் ஏகாதிபத்தியத்திற்கும் சீன தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருந்தது. நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடும், பிற ஏகாதிபத்தியங்களுக்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டன. ஏனெனில் ஜப்பான் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, தேசத்தை காலனியாக்கும் நோக்கம் கொண்டதாகும். இது ஆட்சி அதிகார வகையில் ஏற்படும் பண்பு வகை மாற்றமாகும். அது அனைத்து (உள்நாட்டு நிலப்பிரபுத்துவ



அரசாங்கங்கள் உட்பட) அதிகாரங்களையும் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்து விடும். எனவே புரட்சி இயக்கம் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை, ஆக்கிரமிப்பை முறியடிக்காமல் சீனத்தின் எப்பகுதியிலும் புரட்சிகர மக்களின் தேசிய ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதோ, நிறுவப்பட்டதைக் காப்பாற்றுவதோ சாத்தியமில்லை. இதனால் புரட்சிகர சீன மக்களின் முன் ஜப்பான் ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதற்கான யுத்தம் முதற் கடமையாகியது. இதுவே இக்கட்டத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கும் சீன தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகக் கருதப்பட்டதற்குக் காராணமாகும்.

நான்காவது இடைக் கட்டத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் தோற்கடிக்கப்பட்ட பின் கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட பெரு நிலப்பிரபுக்கள் மற்றும் பெரு முதலாளி வர்க்கங்களின் அரசாங்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் கம்யூனிஸ்டுகளை எதிர்த்து ஒரு எதிர்ப் புரட்சிகர உள் நாட்டு யுத்தத்தைத் தொடுத்தது. இது தேசத்தின் சுதந்திரத்திற்கும், அமைதிக்கும், ஐக்கியத்திற்கும், ஒருமைப்பாட்டிற்கும் எதிரானதாக இருந்தது. எனவே சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தேசத்தின் சுதந்திரம், அமைதி, ஐக்கியம், உறுதி என்ற முழக்கங்களை முன் வைத்து மக்கள் ஜனநாயகக் குடியரசுக்கான இறுதியான புரட்சிகர உள்நாட்டு யுத்தத்தைத் தொடுத்தது. இங்கு முதன்மை எதிரியாக அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற கோமிண்டாங் பிற்போக்கு கும்பலால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட பெரு நிலப்பிரபு வர்க்கமும், பெரு முதலாளி வர்க்கமும் இருந்தது. அதை எதிர்க்கும் புரட்சிகர முகாமில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சீனத்தின் பரந்துபட்ட மக்கள் இருந்தனர். எதிர்ப் புரட்சிகர முகாமில் ஜப்பானிய ஏகாதிபத்தியம் இருந்த நிலைமாறி உள்நாட்டுப் பிற்போக்கு வர்க்கங்களான பெரு நிலப்பிரபு வர்க்கமும், பெரு முதலாளி வர்க்கமும் இருந்தன. பெரு நிலப்பிரபு, பெரு முதலாளி வர்க்கத்திற்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடே அப்போது சீனத்தில் நிலவிய பிற முரண்பாடுகளின் வாழ்வையும், வளர்ச்சியையும் தீர்மானிப்பதாக இருந்ததால் அதுவே முதன்மை முரண்பாடாகக் குறிக்கப்பட்டது. ஏனெனில் அப்போது சீனத்தில் நிலவிய பிற அனைத்து முரண்பாடுகளின் வாழ்வும், வளர்ச்சியும் சீன பெரு நிலப்பிரபு, பெரு முதலாளிகளின் அரசியல் அதிகாரம் வீழ்த்தப் படுவதையும்,

படிப்பகம்

www.padippkam.com



பரந்துபட்ட சீன மக்களின் புரட்சிகர அரசியல் அதிகாரம் நிறுவப் படுவதையும் சார்ந்தே இருந்தது. ஜப்பான் ஏகாதிபத்தியம் முறியடிக்கப்பட்டதும், உள்நாட்டு பெரு முதலாளிகள், பெரு நிலப் பிரபுக்கள் ஆட்சி முதன்மை எதிரியாகியதும் ஆட்சி அதிகார வகையில் ஏற்பட்ட ஒரு பண்பு வகையான மாற்றமாகும்.

இவ்வாறாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி காலனி, அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ சீன சமுதாயத்தின் நான்கு இடைக் கட்டங் களிலும் வர்க்க முரண்பாடுகளைப் பருண்மையாக ஆய்வு செய்து புரட்சி, எதிர்ப் புரட்சி முகாம்களின் வர்க்கச் சேர்க்கையில் அணி வகுப்பில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் அதனால் அரசியல் அதிகார வகையில் ஏற்பட்டிருக்கும் பண்புவகை மாற்றங்களையும் பருண்மையாகக் கண்டறிந்து, புரட்சிகர வர்க்கங்கள் தமது அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கும், நிலைநிறுத்துவதற்கும் எந்த எதிர்ப் புரட்சிகர வர்க்கங்களின் அரசியல் அதிகாரத்தை முதன்மையாக வீழ்த்த வேண்டும் என்பதை பருண்மையாகக் கண்டறிந்து அந்த வர்க்கங்களுக்கும் அதை எதிர்க்கும் புரட்சியின் அனைத்து நட்புச் சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டை முதன்மை முரண்பாடாக குறித்தது. புரட்சி என்பது முதன்மையாக அரசியல் அதிகாரத்தை நோக்கியே மையம் கொண்டுள்ளதால் ஒவ்வொரு இடைக் கட்டத்திலும் புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்கங்களின் வர்க்கச் சேர்க்கையில் அணி வகுப்பில் ஏற்படும் மாற்றமும், முதன்மை எதிரியும் அரசியல் அதிகாரத்தை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன. முதல், இரண்டாவது இடைக் கட்டத்தில் புரட்சி முதன்மையாக நிலப் பிரபுத்துவ (யுத்தப் பிரபுத்துவ) அரசியல் அதிகாரத்தை தூக்கி எறிவதை நோக்கமாகக் கொண்டிருந்ததால் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்து பட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகக் குறிக்கப்பட்டது. இவ்விரு இடைக் கட்டங்களிலும் புரட்சி, எதிர்ப்பு புரட்சி முகாம்களின் வர்க்கச் சேர்க்கையில், அணிவகுப்பில் மாற்றம் ஏற்பட்டிருப்பினும் ஆட்சி அதிகார வகையில் பண்புவகை மாற்றம் ஏற்படாததால் முதன்மை முரண்பாடு மாறவில்லை. மூன்றாவது இடைக் கட்டத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஆதிக்கம், ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட வேண்டியதே புரட்சி இயக்கத்தின் முன் முதன்மை கடமையாக இருந்ததால் ஜப்பான் ஏகாதிபத்தியத்திற்கும், சீன தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக



குறிக்கப்பட்டது. நான்காவது இடைக் கட்டத்தில் பெரு நிலப்பிரபு வர்க்கம் மற்றும் பெரு முதலாளி வர்க்கத்தின் அரசியல் அதிகாரம் தூக்கி எறியப்பட வேண்டியதே புரட்சியின் முதன்மை கடமையாகியதால் அவ்வர்க்கங்களுக்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகக் குறிக்கப்பட்டது. இந்த நான்கு இடைக் கட்டங்களிலும் காலனி, அரைக் காலனி, அரை நிலப் பிரபுத்துவ சீன சமுதாயத்தின் சிறப்பியல்பான உற்பத்தி சக்திகளுக்கும், உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு – அடிப்படை முரண்பாடுகள்– மாற்றம் அடையவில்லை. எனவே முதன்மை முரண்பாட்டைத் தீர்மானிப்பதற்கான முதன்மையான அடிப்படையாக உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு இல்லை. மாறாக எந்த வர்க்கங்களின் அரசியல் அதிகாரம் முதன்மையாக தூக்கி எறியப்பட வேண்டும், அவ்விடத்தில் எந்த வர்க்கங்களின் அரசியல் அதிகாரம் நிறுவப்பட வேண்டும் என்பதை மையமாக வைத்தே தீர்மானிக்கப்பட்டது என்பது தெளிவு.

மேற்கண்டவற்றிலிருந்து முதன்மை முரண்பாட்டை பற்றி நாம் கீழ்க் கண்ட முடிவுகளுக்கு வரமுடியும்.

1. முதன்மை முரண்பாடு என்பது அடிப்படை முரண்பாட்டைப் போல் ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் சிறப்பியல்பான உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடு களின் அடிப்படையில் தீர்மானிக்கப் படுவதில்லை. புரட்சி மற்றும் எதிர்ப் புரட்சி முகாம்களின் வர்க்கச் சேர்க்கையிலும், அணி வகுப்பிலும் மாற்றம் ஏற்படும்போது அது அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையில் ஏற்படுத்தும் மாற்றங்களை பருண்மையாக ஆய்வு செய்து முதன்மை முரண்பாடு தீர்மானிக்கப்படுகிறது.

2. ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கில் புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களில் வர்க்கச் சேர்க்கையிலும், அணிவகுப்பிலும் ஏற்படும் மாற்றம் அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையில் மாற்றம் ஏற்படுத்தாமல் இருக்கும்போது அடிப்படை முரண்பாடே முதன்மை முரண்பாடாகவும் இருப்பதால் முதன்மை முரண்பாட்டின் தீர்வு என்பது அடிப்படை முரண்பாட்டின் தீர்வாகவும், சமுதாய மாற்றத்தை குறிப்பதாகவும் இருக்கிறது. ஒரு

படிப்பகம்

www.padippkam.com



நீண்ட சமுதாய வளர்ச்சிப் போக்கில் புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களின் வர்க்கச் சேர்க்கையிலும் அணி வகுப்பிலும் ஏற்படும் மாற்றம் அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையில் மாற்றம் ஏற்படுத்தும்போது முதன்மை முரண்பாட்டின் தீர்வு என்பது அடிப்படை முரண்பாட்டின் தீர்வையும் சமுதாய மாற்றத்தையும் துரிதப் படுத்துவதாகவும், எதிர்ப் புரட்சிகர சக்திகளைப் பலவீனப் படுத்துவதாகவும் அமைகிறது.

3. பல இடைக் கட்டங்களைக் கொண்ட ஒரு நீண்ட சமுதாய வளர்ச்சிப் போக்கில் முதன்மை முரண்பாட்டின் தோற்றமும் மறைவும் புரட்சி, எதிர்ப் புரட்சி முகாம்களின் வர்க்கச் சேர்க்கையிலும், அணி வகுப்பிலும் ஏற்படும் மாற்றம் அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையில் ஏற்படுத்தும் மாற்றங்களைப் பொறுத்து அமைவதால் ஒரே வகையான சமுதாய வளர்ச்சிப் போக்குகளைக் கொண்ட எல்லா நாடுகளிலும் இடைக் கட்டங் களும் முதன்மை முரண்பாடுகளும் ஒரே மாதிரியாக அமைய வேண்டும் என்பதில்லை. ஏனெனில் சமுதாய வளர்ச்சிப் போக்கு என்பது சிறப்பியல்பான உற்பத்தி சக்திகளுக்கும் உறவுகளுக்கும் இடையிலான முரண்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட அடிப்படை முரண்பாட்டால் தீர்மானிக்கப்படுகிறது. ஆனால் முதன்மை முரண்பாடு என்பது புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களின் வர்க்கச் சேர்க்கை மற்றும் அணி வகுப்பில் ஏற்படும் மாற்றம் அரசியல் அதிகாரத்தில் பண்பு வகையில் ஏற்படுத்தும் மாற்றங்களைக் கொண்டு தீர்மானிக்கப் படுகிறது.

4. எனவே முதன்மை முரண்பாடு என்பது ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கு முழுமையும் ஒன்றாகவே இருக்கும் என்பதும் அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றாகவே இருக்கும் என்பதும் தவறான கருத்துக்களாகும்.



4

# சமுதாயத்தின் அடிப்படை முரண்பாடு மற்றும் முதன்மை முரண்பாடு பற்றி நிலவும் சில தவறான கருத்துக்கள்

சமுதாயத்தில் முதன்மை முரண்பாடு மற்றும் அடிப்படை முரண்பாடுகள் பற்றியும் அவற்றைத் தீர்மானிக்கும் முறை பற்றியும் இந்திய மார்க்சிய – லெனினியக் குழுக்களிடையே சில தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. இவர்களில் சிலர் அடிப்படை முரண்பாடுகளையும் முதன்மை முரண்பாட்டையும் போட்டுக் குழப்பிக் கொள்கின்றனர். அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றே முதன்மை முரண்பாடாக முடியும் என்று இவர்கள் கருதுகின்றனர். இதற்கு ஆதாரமாக காலனிய, அரைக் காலனிய, அரை நிலப்பிரபுத்துவ சீனத்தில் அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றே எப்போதும் முதன்மை முரண்பாடாகியது என்றும் முதலாளித்துவ சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடே முதன்மை முரண்பாடாக குறிக்கப்படுகிறது என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் சீனத்தின் வரலாற்றைத் தவறாகப் புரிந்துகொண்டு தவறாக எடுத்துரைக்கின்றனர். ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்த காலத்திலும், மூன்றாவது உள்நாட்டு புரட்சிகர யுத்த காலத்திலும் சீனத்தில் முதன்மை முரண்பாடாக இருந்தவை அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றல்ல என்ற உண்மையை இவர்கள் பார்க்கத் தவறுகின்றனர். காலனி, அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ சீனத்தின் அடிப்படை முரண்பாடாக இருந்தவை நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடும், ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடும் ஆகும். ஆனால் ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தகாலத்தில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கும் சீனதேசத்திற்கும் இடையிலான முரண்பாடும் மூன்றாவது உள்நாட்டு புரட்சிகர யுத்தகாலத்தில் பெரு நிலப்பிரபுக்கள் மற்றும் பெரு முதலாளிகளுக்கும் பரந்துபட்ட

படிப்பகம்

www.padippkam.com



சீன மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் முதன்மை முரண்பாடு களாக இருந்தன.

அடுத்து, முதலாளித்துவ நாடுகளில் எப்போதும் ஒரே முரண்பாடுதான் (அடிப்படை முரண்பாடுதான்) முதன்மை முரண்பாடாகவும் இருக்கும், இருக்கிறது என்று கூறுவதும் தவறான தாகும். ஏனெனில் ஒரு ஏகாதிபத்தியம் தனது காலனி ஆக்கிக் கொள்வதற்காக அந்த நாட்டின் மீது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்குமானால் அப்போது அந்த நாட்டிற்கும் குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகும். அல்லது உள்நாட்டில் பாசிச சக்திகள் கை ஓங்கி அதன் கரங்களில் ஆட்சி அதிகாரம் இருக்குமானால் பாசிசத்திற்கும் பரந்துபட்ட ஜனநாயக சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகும் என்பதை இவர்கள் பார்க்கத் தவறி விடுகின்றனர்.

ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கில் அடிப்படை முரண்பாட்டால் நிர்ணயிக்கப்பட்ட அல்லது செல்வாக்கு செலுத்தப்பட்ட பல்வேறு முரண்பாடுகள் இருப்பதைக் காட்டி, அடிப்படை முரண்பாடும் முதன்மை முரண்பாடும் ஒன்றே என்று சிலர் தவறாக வாதிடு கின்றனர். இவர்களுடைய வாதங்களின் தவறுகளுக்கு காரணம் அடிப்படை முரண்பாடு என்பது ஒரு சமுதாய வளர்ச்சிப் போக்கின் சாராம்சத்தை தீர்மானிக்கும் சிறப்பியல்பான உற்பத்தி உறவு களுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாட்டின் (உற்பத்தி அரங்கில்) அடிப்படையிலும், முதன்மை முரண்பாடு என்பது புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாம்களில் வர்க்கச் சேர்க்கையிலும், அணி வகுப்பிலும் ஏற்படுத்தும் மாற்றம் ஆட்சி அதிகார வகையில் ஏற்படுத்தும் பண்பு வகை மாற்றங்களின் அடிப்படையிலும் (அரசியல் அரங்கில்) தீர்மானிக்கப் படுகிறது என்ற உண்மையை இவர்கள் கிரகித்துக் கொள்ளத் தவறுவதன் விளைவே ஆகும்.

சிலர் அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் இரண்டு அடிப்படை முரண்பாடுகள் இருப்பதால் இரண்டு சமுதாய வளர்ச்சிப் போக்குகள் இருப்பதாகக் கருதுகின்றனர். இது தவறானதாகும். ஒவ்வொரு சமுதாய வளர்ச்சிப் போக்கும் அதன் அடிப்படை முரண்பாடு தீர்க்கப்படும் போது மற்றொரு சமுதாய வளர்ச்சிப் போக்கையும்,



அடிப்படை முரண்பாட்டையும் கொண்டதாக மாறுகிறது. அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு இரண்டு சமுதாய வளர்ச்சிப் போக்குகளைக் கொண்டதாக உள்ளது எனக் கூறுவது அதன் இரண்டு அடிப்படை முரண்பாடுகளின் தீர்வு புதிய இருவேறு சமுதாய வளர்ச்சிப் போக்குகளையும், இருவேறு அடிப்படை முரண்பாடுகளையும் ஏற்படுத்தும் என்றும் ஒரே சமயத்தில் இருவேறு புரட்சிக் கட்டங் களைக் (Stages) கொண்டிருக்கிறது என்றும் கூறுவதாகும். இது அப்பட்டமான தவறு என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சி சாராம்சம் பிரிக்க முடியாதபடி அந்த அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாய வளர்ச்சிப் போக்கு முழுவதும் நின்று நிலவக் கூடியதாக உள்ளது. அதன் அடிப்படை முரண்பாடுகளும் (ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடும், நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடும்) அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாய வளர்ச்சிப் போக்கு முழுவதிலும் புதிய ஜனநாயகப் புரட்சி வரை பிரிக்க முடியாதபடி நின்று நிலவக்கூடியதாக உள்ளது. இவ்விரு அடிப்படை முரண்பாடுகளின் தீர்வு வெவ்வேறு சமுதாய வளர்ச்சிப் போக்குகளுக்கு (சமுதாயத்திற்கு) இட்டுச் செல்லக் கூடியவை அல்ல. மாறாக இரண்டு அடிப்படை முரண்பாடுகளின் தீர்வும் ஒன்றோடொன்று இணைந்ததாகவும் ஒரே சமுதாயத்திற்கு – புதிய ஜனநாயக சமுதாயத்திற்கு – இட்டுச் செல்வதாகவும் அதனால் ஒரே புரட்சிக் கட்டத்தை கொண்டதாகவுமே இருக்கிறது. [குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் (இது அடிப்படை முரண்பாடு அல்ல) தீர்வையும், ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாட்டின் (இது ஒரு அடிப்படை முரண்பாடு) தீர்வையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. ஏனெனில் குறிப்பிட்ட சமுதாய வளர்ச்சிப் போக்கும் அதன் சாராம்சமும் மறையாமல் இருக்கும் போதே குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு தீரலாம். ஆனால் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு தீர்வதில்லை.]

எனவே அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாயம் இரண்டு அடிப்படை முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும் ஒரே

படிப்பகம்

www.padippkam.com



சமுதாய வளர்ச்சிப் போக்கையே கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு மறுப்பவர்கள் அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் தன்மையையும் அதன் சாராம் சத்தையும், புரட்சியின் கட்டத்தையும் மறுப்பவர்கள் ஆவார்கள் என்பதை சொல்ல வேண்டியதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஜனநாயகப் புரட்சி சாராம்சத்தையும், ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு, நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு ஆகிய இரு அடிப்படை முரண்பாடுகளையும் கொண்டிருந்த காலனிய, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சீன சமுதாயத்தை ஒரே சமுதாய வளர்ச்சிப் போக்காக தோழர் மாவோவும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் சித்தரித்தார்கள் என்பது இதை மேலும் விளக்குவதாகும்.

இன்னும் சிலர் அரைக் காலனி– அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் முதன்மை முரண்பாட்டைக் கண்டறிய மிக எளிய ஆனால் குழந்தைத்தனமான வழி ஒன்றை கூறுகிறார்கள். ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தால் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடு என்றும் அவ்வாறு இல்லை என்றால் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடு என்றும் இவர்கள் கூறுகிறார்கள். இவர்களுடைய கூற்றுப்படி முதன்மை முரண்பாட்டைக் கண்டுபிடிக்க எவ்வித பருண்மையான ஆய்வும் செய்ய வேண்டியதில்லை. ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்துள்ளதா இல்லையா என்று பார்த்தால் போதுமானது. இப்படி கூறும் போது கூட ஒரு விஷயத்தை இவர்கள் கவனிக்கவில்லை. ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும் போது ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும் குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாகிறது (குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு அடிப்படை முரண்பாடு அல்ல) என்ற உண்மை அடிப்படை முரண்பாடுகளில் ஒன்றே முதன்மை முரண்பாடாகிறது என்ற இவர்களுடைய வாதத்தை முறியடித்து விடுவதை இவர்கள் கவனிப்பதில்லை. ஏகாதிபத்தியம் நேரடியாக ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்காத காலங்களில் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடு



என்பதற்கு இவர்கள் கூறும் காரணமென்ன? இத்தகைய நாடுகளில் பெரும்பான்மையான மக்கள் விவசாயிகள்; அவர்கள் கடுமையான நிலப்பிரபுத்துவ அடக்கு முறைக்கு உள்ளாகியுள்ளனர்; புரட்சியின் முதன்மை சக்தியாக விவசாயிகளே உள்ளதால் அவர்களைத் திரட்டுவதற்கு நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்த போராட்டத்தினால் மட்டுமே முடியும்; மேலும் நிலப்பிரபுத்துவம் ஏகாதிபத்தியத்திற்கு சமூக அடிப்படையாக உள்ளது. எனவே நிலப்பிரபுத்துவத் திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்கின்றனர். இவர்களுடைய இந்த வாதம் ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆதிக்கம் இருக்கும் போது கூட பொருந்தும் என்பதை இவர்கள் பார்ப்பதில்லை.

ஏகாதிபத்தியம் இத்தகைய நாட்டை காலனியாக வைத்தாலும் நிலப்பிரபுத்துவ அடக்கு முறைகள் நீடிக்கவே செய்கின்றன. அப் போதும் நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்த போராட்டத்திலேயே அவர்களை திரட்ட வேண்டியதாயிருக்கின்றது. எனினும் முதன்மை முரண்பாடாக நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு குறிக்கப்படாமல் இருப்பதற்கான காரணமென்ன? ஒரே காரணம் தான் இருந்தது. ஆட்சி அதிகாரம் காலனி ஆட்சியாளர்களிடம் – ஏகாதிபத்தியவாதிகளிடம் இருப்பதே. ஏகாதிபத்திய ஆட்சியை தூக்கி எறியாமல் நிலப்பிரபுத்துவத் திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டைக் கூட தீர்க்க முடியாது என்பதால் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையி லான முரண்பாடு முதன்மை முரண்பாடாக குறிக்கப்பட்டது. ஏகாதிபத்தியம் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும் போது கூட ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகக் குறிக்கப்படுவதற்கான காரணம் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு உள்நாட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றி வீழ்த்தி தனது ஆட்சி அதிகாரத்தை நிறுவும் நோக்கம் கொண்டதாய் இருப்பதே ஆகும்.

ஏகாதிபத்தியம் நேரடியாக இல்லாத போது அரசியல் அதிகாரம் நிலப்பிரபுத்துவ வர்க்கத்திடம் இருக்குமானால் – புரட்சிகர மக்கள் தமது புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவ நிலப்பிரபுக்களின் ஆட்சி அதிகாரத்தை தூக்கி எறிய வேண்டியது. முதன்மையான

படிப்பகம்

www.padippkam.com



கடமையாக இருக்குமானால் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்கும். சீனத்தில் வடக்குப் படையெடுப்பின் போதும் விவசாயப் புரட்சி யுத்தத்தின் போதும் புரட்சிகர மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவுவதற்கு நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்களின் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்துவது முதன்மை கடமையாக இருந்ததால்தான் நிலப் பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக குறிக்கப்பட்டது. இவ்வாறு குறிப்பான நாட்டின் குறிப்பான நிலைமைகளை பருண்மையாக ஆய்வு செய்யாமல் ஏகாதிபத்திய ஆதிக்கம் நேரடியாக இல்லாத போது – நேரடி ஆக்கிரமிப்பு இல்லாத போது – நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்று சிலர் தவறாக கூறுகின்றனர். இதை நியாயப்படுத்துவதற்காக சீனத்தின் வரலாற்றை தவறாகப் புரிந்து கொண்டு தவறாக எடுத்துரைக்கின்றனர்.

''முரண்பாடுகளை பருண்மையாக ஆராய வேண்டும்; பருண்மையான ஆராய்வில்லாவிட்டால் எந்த முரண்பாட்டின் சிறப்பியல்பை பற்றியும் எந்த அறிவும் இருக்காது. நாம் லெனினின் பருண்மையான நிலைமைகள் பற்றிய பருண்மையான ஆய்வு என்ற வார்த்தையை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்'' – என மாவோ கூறுவதை இவர்கள் நினைவில் கொள்வதில்லை. சீனத்தின் நிலப்பிரபுக்கள் தனியாக ஆட்சி அதிகாரம் செலுத்திக் கொண்டிருந் தனர் என்பதையும் சீனத்தில் புரட்சிகர மக்கள் தமது புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவ முதல் இரண்டு இடைக் கட்டங்களில் நிலப் பிரபுத்துவ ஆட்சி அதிகாரத்தை வீழ்த்துவதையே முதன்மையான கடமையாக எதிர்கொண்டனர் என்பதையும் இவர்கள் பார்க்கத் தவறுகின்றனர்.

ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனாவை ஆக்கிரமித்து சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டதோடு முழுக்காலனியாக்கு வதற்காக ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடர்ந்து நடத்தியது. அப்போது சீனத்தை ஒரு காலனி, அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடு என்று மாவோ கூறுகிறார். அதாவது சீனத்தின் சில பகுதிகளை ஜப்பான் ஏகாதிபத்தியம் கைப்பற்றி தனது காலனியாக்கிக் கொண்டு முழுவதும் காலனியாக்குவதற்கான ஆக்கிரமிப்பு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தது. பிற பகுதிகளில் பெரு



முதலாளிகள் பெரு நிலப்பிரபுக்களின் மையப்படுத்தப்பட்ட கூட்டு சர்வாதிகாரம் நிலவியது. இதைப்பற்றி 1939இல் 'சீனப் புரட்சியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும்' என்ற கட்டுரையில் மாவோ பின் வருமாறு கூறுகிறார்.

> ''சக்கரவர்த்திகளினதும், பிரபுக்களினதும் எதேச்சதிகார ஆட்சி தூக்கிஎறியப்பட்டு அந்த இடத்தில் முதலில் நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுக்களின் அதிகார வர்க்க ஆட்சியும் பின்னர் பெரு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபு வர்க்கத்தின் கூட்டு சர்வாதிகாரமும் தோற்றம் பெற்றுள்ளன. கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தினதும் அதன் கைப்பாவைகளினதும் ஆட்சி நிலவுகிறது''.

இம்மேற்கோளை வைத்துக் கொண்டு சிலர் சீனத்தில் முதலில் சக்கரவர்த்திகள் மற்றும் பிரபுக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் பின்னர் நிலப்பிரபுத்துவ, யுத்தப் பிரபுத்துவ அதிகார வர்க்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடும், அதன் பின்னர் மூன்றாவதாக பெரு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபு வர்க்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடும் தானே சீனத்தில் முதன்மை முரண்பாடுகளாகி இருக்கவேண்டும்? அவ் வாறின்றி ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனத்தை காலனியாக்கும் நோக்கத்துடன் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுக்கும் வரை (1931 செப்டம்பர் 18 வரை) நிலப்பிரபுத்துவத்திற்கும், மக்களுக்கும் இடையிலான முரண்பாடுதானே சீனத்தில் முதன்மை முரண்பாடாய் இருந்தது என்று கேட்கிறார்கள். சீனத்தில் முதலில் நிலவிய சக்கரவர்த்திகளினதும் பிரபுக்களினதும் ஆட்சியும் பின்னர் அமைந்த நிலப்பிரபுத்துவ யுத்தப் பிரபுத்துவ அதிகார வர்க்க ஆட்சியும் இரண்டுமே நிலப்பிரபுத்துவ ஆட்சியே. எனவே அவ்விரு காலங் களிலும் நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்பதில் எந்த முரண்பாடும் இல்லை என்பதை இவர்கள் ஏனோ பார்க்க மறுக்கின்றனர். மேலும் பெரு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபு வர்க்கத்தின் கூட்டு சர்வாதிகாரம் இருந்தபோது ஜப்பான் ஏகாதிபத்தியம் சீனத்தின் சில பகுதிகளைக் காலனியாக வைத்துக்கொண்டு ஆட்சி செய்து கொண்டிருந்தது என்பதையும் முழுக் காலனியாக்குவதற்கான ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ஈடுபட்டிருந்தது என்பதையும் மாவோவின் மேற்கோள் தெளிவு

படிப்பகம்

www.padippkam.com



படுத்துகிறது. இத்தகைய நிலையில் ஜப்பான் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடாக இருக்க முடியுமேயன்றி பெரு முதலாளிகள் மற்றும் நிலப்பிரபு வர்க்கத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்க முடியாது. மேலும் அப்போது இருந்த மத்திய அரசைப்பற்றி 'சீனப் புரட்சி யுத்தத்தின் மூலவுத்தி' என்ற கட்டுரையில் 1936 டிசம்பரில் மாவோ கீழ்க்கண்டபடி குறிப்பிடுகிறார். "பெரும் யுத்தப் பிரபுக்கள் மத்திய அரசாங்கத்தை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். சிறிய யுத்தப் பிரபுக்கள் மாகாணங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு வகையான பிற்போக்கு இராணுவங்கள் இருந்தன. ஒன்று சியாங் கே ஷேக்கின் கீழ் பெயரளவுக்கு மட்டும் இருந்த மத்திய ராணுவம், மற்றொன்று பல்வேறு யுத்தப் பிரபுக்களின் கட்டுப்பாட்டில் ஒவ்வொரு மாகாணத்திலும் இருந்த இதர வகைப் படைகள்".

எனவே ஜப்பான் ஏகாதிபத்தியம் 1931 செப்டம்பர் 18இல் சீனத்தின் மீது அதை தனது முழுக் காலனியாக்கிக் கொள்வதற்காகப் படையெடுக்கும் வரை நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடே முதன்மை முரண்பாடு என்பதற்கும், முதன்மை முரண்பாடு அரசியல் அரங்கில் புரட்சி, எதிர்ப் புரட்சி வர்க்க முகாமில் வர்க்கச் சேர்க்கைகளில், அணி வகுப்பில், அரசியல் அதிகார வகையில் ஏற்படும் மாற்றங்களின் பண்பு வகை நிலைமைகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையிலே தீர்மானிக்கப்படுகிறது என்று நாம் கூறுவதற்கும் இடையில் முரண்பாட்டை கண்டுபிடிக்க முயல்வது வீண் முயற்சியே ஆகும். சீனத்தில் ஜப்பான் ஏகாதிபத்தியம் சீன மக்களின் புரட்சிகர எதிர்ப்பு யுத்தத்தால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் (1945க்குப் பின் பெரு முதலாளிகள் மற்றும் பெரு நிலப்பிரபுக்கள் வர்க்கங்களின் பிரதிநிதியான கோமிண்டாங் பிற்போக்குக் கும்பலின் ஆட்சி அதிகாரத்தை தூக்கி எறிவது புரட்சிகர மக்களின் முதன்மையான கடமையாகியதால்) பெரு முதலாளிகள் மற்றும் பெரு நிலப்பிரபு வர்க்கங்களுக்கும் சீனத்தின் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு அப்போது முதன்மை முரண்பாடாகியது என்ற உண்மை இதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

இன்னும் சிலர் முதன்மை முரண்பாடு பற்றிய கணிப்பிலிருந்து கிராமப்புறப் பணியா, நகர்ப்புறப் பணியா, எதற்கு முதலிடம் கொடுப்பது, எவ்வித அமைப்புகளைக் கட்டுவது, நடத்துவது என்பது உள்பட தீர்மானிக்கப் படுவதாகக் கருதுகின்றனர். முதன்மை முரண்பாட்டின் முக்கியத்துவத்தை இது கொச்சைப் படுத்துவதாக இருப்பது மட்டுமின்றி கிராமப்புறப் பணியா, நகர்ப்புறப் பணியா எதற்கு முதலிடம் கொடுப்பது, எவ்வித அமைப்புகளைக் கட்டுவது, நடத்துவது என்பதைத் தீர்மானிப்பதற்கான பிற காரணிகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் தடுக்கும் அபாயம் கொண்டது மாகும். முதன்மை முரண்பாட்டில் மாற்றம் ஏற்படாமலேயே எவ்வித அமைப்புகளைக் கட்டுவது என்பதில் மாற்றம் ஏற்படலாம், தாக்குதல் அல்லது தற்காப்பு செயலுத்தி நிலைமைகளுக்கு ஏற்ப அமைப்புகளைக் கட்டும் முறையில் மாற்றம் ஏற்படலாம் என்பதையும் முதன்மை முரண்பாடு மாறினாலும் கூட கிராமப்புறப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மாறாமல் இருக்கலாம் என்பதையும் இவர்கள் முதன்மை முரண்பாட்டுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் (!?) மறைத்து விடுகிறது.



அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுககும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்கும்போது மட்டுமே புரட்சியின் சாராம்சம் விவசாயப் புரட்சியாக இருக்கும் என்று வாதிடுகின்றனர். இது தவறானதாகும். தோழர் ஸ்டாலின் குறிப்பிடுவது போல் "விவசாயப் புரட்சி என்பது முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் அடிப்படையும் உள்ளடக்கமுமாகும்" ('சீனப் புரட்சி பற்றி' என்ற கட்டுரையில்) நிலப்பிரபுக்களின் கரங்களில் குவிந்திருக்கும் நிலம் விவசாயிகளுக்கு எவ்வித நட்டயீடும் இன்றி உடைமையாக்கப்படுவதும் தொழிலாளி வர்க்கத்துடன் இணைந்து உழைக்கும் விவசாயிகள் அரசியல் அதிகாரம் பெறுவதும் தான் விவசாயப் புரட்சியின் சாரம் ஆகும். நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியை முதலாளித்துவ வர்க்கம் நிறைவேற்றாத நிலையில் – நிலப்பிரபுத்துவ வர்க்கத்துடன் முதலாளி வர்க்கம் சமரசமாக அனுசரித்துச் சென்று விடும் நிலையில் – பாட்டாளி வர்க்கம் விவசாயி வர்க்கத்தைச் சார்ந்து நின்று விவசாயப் புரட்சியை நடத்துவதன் மூலம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நிறைவடையச் செய்து சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேற வேண்டும் என வழி காட்டியிருப்பது லெனினியம்.

படிப்பகம்

www.padippkam.com



அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் பாட்டாளி வர்க்கம் இக்கடமையை எதிர் கொள்கிறது. அரை நிலப்பிரபுத்துவ நாடாயிருந்த ரசியாவில் ஜார் எதேச்சதிகாரத்தை எதிர்த்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் இக்கடமையை எதிர் கொண்டது. அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ *சீனத்தில்* ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்த்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் இக்கடமையை எதிர் கொண்டது. இவ்விரு நாடுகளிலும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் அடிப்படையும், உள்ளடக்கமுமாக இருந்தது விவசாயப் புரட்சியே. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி முற்றுப்பெறும் வரையிலும் அக்கட்டம் முழுவதிலும் அதன் அடிப்படையாகவும் உள்ளடக்கமாகவும் விவசாயப் புரட்சியே இருக்கும். சமுதாய வளர்ச்சிப் போக்கு நீண்டதாகவும் சிக்கலானதாகவும் பல்வேறு இடைக் கட்டங்களைக் கொண்டதாகவும் மாறுபட்ட முதன்மை முரண்பாடுகளைக் கொண்டதாகவும் இருப்பினும் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி என்ற புரட்சியின் தன்மையும், கட்டமும், அதன் உள்ளடக்கமாகவும் அடிப்படையாகவும் இருக்கும் விவசாயப் புரட்சியும் மாறிவிடுவதில்லை. காலனி, அரைக் காலனி, அரை நிலப்பிரபுத்துவ *சீன* சமுதாய வளர்ச்சிப் போக்கு நீண்டதாகவும் மூன்று முதன்மை முரண்பாடுகளைக் கொண்டதாகவும், சிக்கலான தாகவும் நான்கு இடைக் கட்டங்களைக் கொண்டதாகவும் இருந்தது. எனினும் அவ்வளர்ச்சிப் போக்கின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சித் தன்மையோ, புரட்சியின் கட்டமோ–முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் அடிப்படையாகவும் உள்ளடக்கமாகவும் விவசாயப் புரட்சி இருப்பதோ– மாறிவிடவில்லை என்பது வரலாற்று உண்மை.

ஆனால் சிலர் நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்கும் போது மட்டுமே புரட்சியின் சாராம்சம் விவசாயப் புரட்சியாக இருக்கும் என்றும் ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாகும் போது விவசாயச் சீர்திருத்தமே புரட்சியின் சாராம்சமாக இருக்கும் என்றும் இது பண்பு வகை மாறுபாடு என்றும் எனவே புரட்சியின் தன்மை, சாராம்சம் ஆகிய இரண்டுமே முதன்மை முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப் படுகிறது என்றும் கூறுகிறார்கள்.



முதன்மை முரண்பாடு நிலப்பிரபுத்துவத்திற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலானதாக இருப்பினும், குறிப்பிட்ட ஏகாதிபத்தியத்திற்கும் தேசத்திற்கும் இடையிலானதாக இருப்பினும் அல்லது வேறு ஒன்றாக இருப்பினும் காலனி – அரை நிலப்பிரபுத்துவ, அரைக் காலனி – அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் புரட்சியின் தன்மை முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியே என்பதிலும் அதன் சாரம் விவசாயப் புரட்சியே என்பதிலும் எவ்வித மாற்றமும் இருப்பதில்லை. எனவே முதன்மை முரண்பாட்டைப் பொறுத்து புரட்சியின் சாராம் சமும் தன்மையும் தீர்மானிக்கப் படுவதில்லை. அது சமுதாய வளர்ச்சிப் போக்கின் அடிப்படை முரண்பாடுகளால் தீர்மானிக்கப் படுவதாகும்.

ஏகாதிபத்தியத்துக்கும் தேசத்துக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்கும்போது கூட புரட்சியின் தன்மை இந்நாடுகளில் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியே ஆகும். இவ்விடைக் கட்டத்தில் முன் வைக்கப்படும் குறிப்பான திட்டத்தை (Specific Programme) விவசாயச் சீர்திருத்தம் என்று கூறுவது விவசாயப் புரட்சியை கொச்சைப் படுத்துவதாகும். ஏனெனில் அப்போது கூட முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கமாகவும், அடிப்படையாகவும் விவசாயப் புரட்சியே இருக்கிறது. இதை மறுப்பது அவ்விடைக் கட்டத்தில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சித் தன்மையையே மறுப்பதாகும். மேலும் விவசாயச் சீர்திருத்தம் எனக் கூறி அது விவசாயப் புரட்சியில் இருந்து பண்பு வகையில் வேறுபட்டது எனக் கூறுவது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்குப் பதில் முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்தை முன் நிறுத்துவதாகும்.

முதன்மை முரண்பாட்டை பொறுத்து புரட்சிகர ஐக்கிய முன்னணியும் அதற்கான முழக்கங்களும் மாறுபடும். ஆனால் புரட்சியின் முதலாளித்துவ ஜனநாயகத் தன்மையும், அதன் சாராம் சமான விவசாயப் புரட்சியும் மாறுவதில்லை.

முதன்மை முரண்பாட்டைப் பொறுத்து புரட்சியின் சாராம்சமும் பண்பு வகையில் வேறுபடுவதாகக் கூறுகின்றவர்கள் புரட்சிகர சீர் திருத்தத்திற்கும் முதலாளித்துவ ஜனநாயக சீர்திருத்தவாதத்துக்கும் இடையிலான வேறுபாட்டைப் பார்க்கத் தவறி குழப்பிக் கொள்கிறார்கள். மேலும் புரட்சியின் சாராம்சம் விவசாயப் புரட்சியா இல்லையா என்பது

படிப்பகம்

www.padippkam.com



முதன்மை முரண்பாடு நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலானதா இல்லையா என்ற விசயத்தை பொறுத்ததல்ல. மாறாக புரட்சியின் கட்டம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக் கட்டமா இல்லையா என்பதைப் பொறுத்த விசயமே என்பதையும் இவர்கள் பார்க்கத் தவறுகிறார்கள். முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக் கால கட்டம் முழுவதிலும் அதன் சாராம்சமாக (அடிப்படையாகவும், உள்ளடக்கமாகவும்) இருப்பது விவசாயப் புரட்சியே. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி கட்டம் முழுவதிலும் முதன்மை முரண்பாடுகள் பலமுறை மாறினாலும் (நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருப்பினும், இல்லாவிடினும்) அதன் சாராம்சமாக இருப்பது விவசாயப் புரட்சியே. இதை மறுப்பவர்கள் – நிலப்பிரபுத்துவத்திற்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு முதன்மை முரண்பாடாக இருக்கும் போது மட்டுமே புரட்சியின் சாராம்சம் விவசாயப் புரட்சியாக இருக்கும் என்று கூறுகின்றவர்கள் – முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக் கட்டத்திற்குள் வேறு முரண்பாடுகளும் முதன்மை முரண்பாடுகளாக வரலாம் என்பதை மறுப்பவர்களாகவோ அல்லது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக் கட்டம் முழுவதிலும் அதன் சாராம்சமாக விவசாயப் புரட்சியே இருக்கும் என்பதை மறுப்பவர்களாகவோ (இதன் மூலம் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கமும் அடிப்படையும் விவசாயப் புரட்சியே என்று ஸ்டாலின் கூறுவதை மறுப்பவர்களாக) இருப்பார்கள். இது அவர்களை முதலாளித்துவ சீர்திருத்தவாதிகளாக மாற்றிவிடும் அபாயம் கொண்டதாகும்.